**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்–2, கரூர்.**

**முன்னிலை** : திரு. எம். சார்லஸ் ஆல்பர்ட், B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்–2, கரூர்.

திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம், வைகாசி திங்கள் 26–ஆம் நாள்,
**2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 09–ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**சுருக்குவிசாரணை வழக்கு எண்.602/2026**

**அரசுக்காக**
**காவல் உதவி ஆய்வாளர்,**
வெள்ளியணை காவல் நிலையம்.
**(காவல்நிலைய குற்ற எண். 159/2025).** ... முறையிடுபவர்.

**.../ எதிர்/...**

**1. பழனிசாமி,**
த/பெ. பொன்னுசாமி ... எதிரி

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் 26.03.2026–ம் தேதியன்று கோப்பில் எடுக்கப்பட்டு, இன்று வரையில் என் முன்பாக விசாரணைக்கும், எனது பரிசீலனையிலும் இருந்து வந்தும், இறுதியாக 09.06.2026–ம் தேதியன்று அரசு தரப்பில் அரசு வழக்கறிஞர்–நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தாமாக முன்னிலையாகியும் எதிரிகள் தெரிவித்த ஒப்புதல் மற்றும் ஆவணங்களை பரிசீலித்தும் 09.06.2026 ம் தேதி இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

கடந்த 08.06.2025 ம் தேதி இரவு 10.30 மணிக்கு இவ்வழக்கின் வாதியான திரு.குமார், என்பவரின் அத்தையும் இவ்வழக்கின் காயம்பட்டவருமான திருமதி.கோமதி என்பவர் அவரது குடும்பத்துடன் தோகைமலையில் உள்ள வாதியின் வீட்டிற்கு சென்றுவிட்டு திரும்ப வெங்கமேட்டில் உள்ள காயம்பட்டவரின் வீட்டிற்கு செல்வதற்காக TN–47–AA–7713 என்ற பதிவு என் கொண்ட PIAGGIO என்ற ஆட்டோவில் தோகைமலையிலிருந்து புறப்பட்டு ஆட்டோவை அவரது கணவரும் இவ்வழக்கின் எதிரியுமான பழனிச்சாமி ஆட்டோவை ஓட்ட காயம்பட்டவரான கோமதி என்பவர் அவரது இரண்டு மகன்களுடன் பின்னால் உட்கார்ந்து கொண்டு பாளையம் – கரூர் ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி மணவாடி அய்யம்பாளையம் அருகே சென்று கொண்டிருந்தபோது எதிரி பழனிச்சாமி என்பவர் ஆட்டோவை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி இடது பக்கமாக திருப்பி ரோட்டின் ஓரத்தில் இருந்த கல் மீது ஏற்றி ஆட்டோ கவிழ்ந்து விபத்து ஏற்படுத்தியதில் கோமதி என்பவருக்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தியதாகவும், எனவே உங்களது செய்கைக்கு வெள்ளியனை காவல் ஆய்வாளர் உங்கள்மீது ச/பி. 281, 125 (b)BNS–ன் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும், பா.நா.சு.ச. பிரிவு 230–ன் கீழ் எதிரிக்கு வழங்கப்பட வேண்டிய அரசுதரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

3. இருதரப்பும் கேட்டும், இவ்வழக்காவணங்களை ஆராய்ந்தும், எதிரி மீதான குற்ற சாராம்சம் குறித்து எடுத்துக் கூறி வினவிய போது எதிரி குற்றத்தை ஒப்புக் கொள்கிறேன் எனவும் அபராதம் மட்டும் விதித்து தன்னை விடுதலை செய்யுமாறும் வேண்டினார்.

4. எதிரியின் தன்னிச்சையான குற்ற ஒப்புதலைக் கருத்தில் கொண்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்த வகையிலும் எதிரி மீது ச/பி. 281, 125(b) ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

5. முடிவாக எதிரியின் மீது ச/பி. 281, 125(b)–ன் கீழ் குற்றவாளி என்று தீர்மானித்து அவருக்கு வழங்கப்படவிருக்கும் தண்டனை குறித்து வினவியபோது எதிரி குற்றத்தை ஒப்புக் கொள்கிறேன் எனவும், முன் வழக்கு எதுவும் இல்லை என்றும், தண்டனையை குறைத்து தருமாறும் வேண்டினார்.

6. முடிவில், எதிரியின் பதிலைக் கருத்தில் கொண்டு எதிரியின் மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டான ச/பி.281, 125(b) நிரூபிக்கப்பட்டு, கீழான குற்றமானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருப்பிக்கப்பட்டுள்ளது என முடிவு செய்து எதிரிக்கு 281 –ன் கீழான குற்றத்திற்கு அபராதம் தலா ரூ.**1,000**/–மும், அபராதத்தை கட்டத் தவறினால் 1 வாரம் மெய்க்காவல் சிறை தண்டனையும் மற்றும் பா.நா.சு.ச 2023 பிரிவு 125(b)–ன் கீழான குற்றத்திற்கு அபராதம் ரூ.**10,000**/–மும், அபராதத்தை கட்டத் தவறினால் 4 வாரம் மெய்க்காவல் சிறை தண்டனையும் விதித்து பா.நா.சு.ச பிரிவு 275–ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. இவ்வழக்கின் மொத்த அபராதம் தொகை **ரூ.11,000/–**

7. எதிரியை காவல்துறையினரால் பிணையின் பேரில் விடப்பட்ட பிணையமானது மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னிட்டு தானாகவே ரத்தாகிவிடும் என உத்தரவிடப்படுகின்றது.

8. இவ்வழக்கில் வழக்குச் சொத்தாக எதுவும் குறியீடு செய்யப்படவில்லை என்பதால் அது சம்மந்தமாக எந்த உத்தரவும் பிறப்புவிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026– ம் ஆண்டு ஜூன் மாதம் 09–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

M CHARLES ALBERT

Digitally signed by M CHARLES ALBERT

**நீதித்துறை நடுவர் எண்.2,**

**கரூர்.**